செய்தி வெளியீடு எண்: 194 நாள்: 04.03.2019

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (4.3.2019) தலைமைச் செயலகத்தில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் சேலம் மாநகராட்சி, சூரமங்கலம் மண்டலம், பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். மத்திய பேருந்து நிலைய வளாகத்தில் 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அம்மா சுற்றுச்சூழல் அரங்கத்தை திறந்து வைத்தார்கள். மேலும், சேலம் மாநகராட்சி பகுதிகளில் 61 கோடியே 10 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 307 சாலைகள் மறுசீரமைக்கும் பணிகள் மற்றும் கோட்டை பகுதியில் 3 கோடியே 51 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள உள்விளையாட்டு அரங்கம் ஆகிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்கள்.

நகர்ப்புறங்களில் பெருகி வரும் மக்கட்தொகைக்கேற்ப குடிமைப் பணிகளை நிறைவேற்றிக் கொடுப்பது, அனைத்து மக்களுக்கும் பாதுகாப்பான குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்றும் வசதிகளை வழங்குவது உள்ளாட்சி அமைப்புகளின் தலையாய கடமைகளாகும். இத்தகைய பணிகளை மேற்கொள்ளும் உள்ளாட்சி அமைப்புகளின் செயல்பாட்டை ஊக்குவிக்கும் வகையிலும், பொது சுகாதாரத்தை மேம்படுத்தும் வகையிலும், கழிவு நீரை அகற்றிடவும், பொதுமக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யவும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு பல்வேறு திட்டங்களை சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், சேலம் மாநகராட்சி, சூரமங்கலம் மண்டலம், பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். மத்திய பேருந்து நிலைய வளாகத்தில் 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அம்மா சுற்றுச்சூழல் அரங்கத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

மேலும், சேலம் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ஒருங்கிணைந்த நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் சேலம் மாநகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம் மற்றும் தனிக்குடிநீர் திட்ட குழாய் பதிக்கும் பணிகளால் பாதிக்கப்பட்ட சாலைகளை சீரமைத்திடவும், மழைநீர் வடிகால் பணி மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணிகளை மேற்கொள்வதற்காக 21 கோடியே 10 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 20.846 கிலோ மீட்டர் நீளத்திற்கு 117 சாலைகள் மறுசீரமைக்கும் பணிகள்;

சேலம் மாநகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்படாத பகுதிகளில் உள்ள பழுதடைந்த சாலைகளை சீர்செய்திட 40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 67.32 கிலோ மீட்டர் நீளத்திற்கு 190 சாலைகள் மறுசீரமைக்கும் பணிகள்;

சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ் சேலம் மாநகராட்சி, கோட்டை, சின்னசாமி தெருவில் 3 கோடியே 51 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள உள்விளையாட்டு அரங்கம்;

என மொத்தம் 64 கோடியே 61 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான திட்டப் பணிகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று அடிக்கல் நாட்டினார்கள்.

சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றும் வாரியத்தில் 5 துணை நிதி கட்டுப்பாடு அலுவலர், 2 முதுநிலை கணக்கு அலுவலர், 113 உதவி பொறியாளர் (சிவில் மற்றும் மெக்கானிக்), 45 உதவி பொறியாளர் (எலக்ட்ரிகல்) மற்றும் 155 இளநிலை உதவியாளர்கள் ஆகிய பணியிடங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட 320 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று 10 நபர்களுக்கு உதவிப் பொறியாளர் மற்றும் இளநிலை உதவியாளர் பணியிடங்களுக்கான பணிநியமன ஆணைகளை வழங்கினார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.ஓ. பன்னீர்செல்வம், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு.எஸ்.பி. வேலுமணி, மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.ஹன்ஸ் ராஜ் வர்மா, இ.ஆ.ப., நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் திரு.ஹர்மந்தர் சிங், இ.ஆ.ப., நகராட்சி நிர்வாக ஆணையர் முனைவர் டி.கார்த்திகேயன், இ.ஆ.ப., சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றும் வாரிய மேலாண்மை இயக்குநர் திரு. T.N. ஹரிஹரன் இ.ஆ.ப., மற்றும் அரசு உயர்அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

• • • • •

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**